## குமரி முனையில் முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவிய

# திருவள்ளுவர் பேரறிவுச் சிலைக்கு வெள்ளி விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் டிச.30–31 தேதிகளில் நடைபெறுகிறது!



**சென்னை, டிச.29-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலை (STATUE OF WISDOM) வெள்ளி விழா மூன்று நாட்கள் கோலாகலமாகவும், பட்டிமன்றம், கருத்தரங்கம் நிகழ்ச்சிகளுடன் கலை நிகழ்ச்சிகளும் எழுச்சியோடு நடைபெறுகின்றன. 37 கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும் - விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழை பாலம் திறந்து வைக்கப்படுகிறது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளதைத் தொடர்ந்து 30.12.2024 முதல் 1.1.2025 வரை மூன்று நாள்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் வெள்ளி விழா நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நடத்துகிறார்கள்.

இதன் காரணமாக முக்கடல்கள் கூடும் குமரிமுனை இன்று விழாக் கோலம் கண்டு குதூகலம் அடைகிறது.

அய்யன் திருவள்ளுவர் சிலை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 25 ஆண்டுகளுக்குமுன் புத்தாயிரம் ஆண்டின் முதல் நாள் 1.1.2000 அன்று குமரி முனையில் திறந்து வைக்கப்பட்ட மாபெரும் விழா உலகமே பாராட்ட - ஈழம், சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, ஜப்பான் முதலான பல வெளிநாடுகளிலிருந்து அறிஞர் பெருமக்களும், அய்யன் திருவள்ளுவர்பால் பற்றும், பாசமும் கொண்டுள்ள சான்றோர்களும், இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், ஒட்டுமொத்த தமிழகத்திலிருந்து பேரறிஞர்களும், பொதுமக்களும் திரளாக வருகை தந்து விழாவைப் பெருமைப் படுத்தி வெற்றி தேடித் தந்தனர்.

**வரலாற்றுப் பொன்னாள் - கலைஞர் எழுத்து!**

அய்யன் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுப் பொன்னாள் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ‘நெஞ்சுக்கு நீதி’யில் பின் வருமாறு விரிவாக எழுதியுள்ளார்கள்.

“விண்முட்டும் திருவள்ளுவர் சிலையினைக் குவிந்திருந்த இலட்சக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களின் வாழ்த்துகளுடன் நான் திறந்து வைத்தேன். விழாவினை நேரில் கண்ணுற்றோர் வாழ்வில் பெரும் பேறு பெற்றோர் எனும் அளவிற்கு எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது அந்த விழா.

கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டு களித்த காட்சி! செவிப்பறை சிறிதும் பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட எழுச்சி! ஆம்; முக்கடலும் தம் அலை இதழ்களால் முத்தமிட்டு மயங்கும் குமரிக் கடற்கரையில் - முப்பால் யாத்த ஞானத் தமிழ் அய்யன் திருவள்ளுவருக்கு விண்முட்டும் சிலை வடித்து - அதைத் திறந்து வைத்திடும் வாய்ப்பு அமைந்ததே; அந்த வாய்ப்பு என் வாழ்நாளில் என் நினைப்புக்கும், உழைப்புக்கும் கிடைத்த வரமல்லவா?

வழக்கமாகக் கதைகளிலும், புராணங்களிலும் வரம் பெறுவோர் எல்லாம் தம்மை வலுப்படுத்திக் கொண்டு, தமது ஆதிக்கத்தை அகல விரிப்பதிலேயே அக்கறை செலுத்துவர். ஆனால் எனக்கோ, கிடைத்த வரம், என் அய்யன் திருவள்ளுவனைச் சிலையாகக் கண்டிட - அதுவும் அவன் குறளில் எத்தனை அதிகாரம் இயற்றினானோ - அத்தனை அதிகாரம்; அதாவது 133 அதிகாரங்களைக் குறிக்கும் 133 அடி சிலையை - இந்தியப் பூபாகத்தில் வட இமயத்துக்கு நிகராகத் திகழும் தென் குமரியில் நிறுவிட முடியும் என்னால் என்ற வரமல்லவா?

அந்த வரத்தைத் தவற விட்டிடாமல் அதனை நிறைவேற்ற வேண்டுமே என்பதற்காக, 25 ஆண்டு காலம் நித்தமும் தவம் செய்தேன் - அந்தத் தவம் பலித்தது - என்தாபம் தணிந்தது - பிறவியெடுத்த பயனைக் கண்டேன், முழுமையாக!

அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது, என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது. மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். நாதசுர இசைவாணர்களும், தவில் வித்வான்களும், அவர்தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கு மேற்பட்டோர்; அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம்! மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும்! அந்த அளவுக்கு மெய் மறந்து போயிருந்திருக்கிறேன்! சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறேன்!

1975ஆம் ஆண்டு (31.12.1975) நான் முதல்வராக இருந்த காலகட்டத்தில், அமைச்சரவைக் கூட்டத்தில் குமரிமுனையில் வள்ளுவர் சிலை அமைத்திட முடிவு எடுத்து. 1975 டிசம்பர் 31ல் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது

இளமைப் பருவம் முதல் எந்தவொரு தத்துவ வித்தகனை இமைப்பொழுதும் மறவாமல் - எழுத்தில், பேச்சில், இயக்கத்தில் நினைவுபடுத்திக்கொண்டே இருந்தேனோ - யாருக்கு வரலாறு போற்றும் வள்ளுவர் கோட்டம் அமைத்தேனோ - யாருக்காக ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என அறிவித்தேனோ - பேருந்துகளிலும், பயணியர் விடுதிகளிலும், ஒழுக்கம் போதிக்கும் குறளை எந்த ஒளிமிகு ஏந்தலுக்காக எழுதச் செய்து உருவப்படத்துடன் அமைத்தேனோ - யாருடைய குறளுக்கு குறளோவியம் தீட்டி; பின்னர் 1,330 குறள்களுக்கும் உரையும் எழுதினேனோ - அந்த அய்யன் திருவள்ளுவருக்கு இருபத்து ஐந்து ஆண்டு காலப் பெரு முச்சுக்குப் பிறகு சிலை அமைந்தது - அதைத் திறந்து வைக்க எனக்கு ஆயுளும் இருந்தது என்கிறபோது என் மன நிலையை வர்ணித்திட, தமிழ்த்தாய் தன்னிடம் இருக்கும் சொற்களுக்குப் பஞ்சமென்று சொல்லிவிட்டாளே, நான் என்ன செய்ய !” - என்று பெருமிதஉணர்வு மிளிர எழுதியுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர்.

**எழுச்சிக் கோலம்**

அந்த மாபெரும் வரலாற்றுப் பொன்னேடு மலர்ந்த புனித நன்னாள் 25 ஆண்டுகளுக்குப்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று மீண்டும் எழுச்சிக் கோலம் கொண்டு வெள்ளி விழா என்னும் முத்திரையோடு கன்னியாகுமரி மட்டும் அல்ல; தமிழ்நாடு முழுவதுமே விழாவின் வீச்சினை பரப்பி நிற்கிறது.

இன்று தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றும் பல்வேறு முத்திரைச் சாதனைகளை நிகழ்த்தி இந்திய நாடு முழுவதிலும் மட்டும் அல்ல; உலகின் பல்வேறு நாடுகளிலும் புகழ்க்கதிர் வீசிவரும் உதயசூரியன் - திராவிடநாயகர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறார்.

**வெள்ளி விழாப் பணிகள்**

அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்ட வெள்ளி விழா ஆண்டு நிறைவையொட்டி சில வெள்ளி விழாப்பணிகள் திராவிட மாடல் அரசின் சார்பில் மேற்கொள்ளப்படும் என 12.12.2024 அன்று அறிவித்திருந்தார். இந்த வெள்ளிவிழாப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, மொத்தம் 10 கோடியே 89 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார்கள்.

• பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டிகள், கல்லூரி மாணவர்களிடையே சோஷியல் மீடியாவில் ஷார்ட்ஸ் - ரீல்ஸ் - ஏ.ஐ மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் வாயிலாக திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

• அய்யன் திருவள்ளுவரின் சிலை நிறுவப்பட்டிருக்கின்ற இடங்கள் வரைபடத்தில் குறிக்கப்பட்டு, எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

• அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை அருகே சீரொளிக் காட்சி (3D Laser) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

• வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ் இணையக் கழக மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், பிற மாநிலங்களில் இருக்கும் தமிழ்ச் சங்கங்கள், புது டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் யூடியூப் மூலம் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றது.

• வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு தமிழ் இணையக் கழகமையங்கள் மூலமாகத் திருக்குறளின் பெருமைகள் குறித்த போட்டிகள் நடத்தப்படுகின்றன.

• தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட நூலகங்களிலும், இன்றைய நிறைவு நாளில் திருவள்ளுவர் புகைப்படம் வைக்கப்பட்டு திருக்குறளின் பெருமைகளை உணர்த்துகின்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுத் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்படுகிறது.

• திருக்குறள் விளக்க உரைகள் மற்றும் திருக்குறள் தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

• டிசம்பர் 25 முதல் 30 வரை மாவட்ட அளவில் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கம், பேச்சரங்கம் முதலியவை நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இப்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவிய 25ஆம் ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவை மூன்று நாள் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

**முதல் நாள் நிகழ்ச்சிகள்**

முதல்நாள் நிகழ்ச்சிகள் 30.12.2024, திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குகிறது.

அத்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தீவிர முயற்சிகளின் பயனாக 37 கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழை பாலம் கட்டப்பட்டு அதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

அத்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்குறள் நெறிபரப்பும் 25 தகைமையாளர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கிறார்கள்.

மாலை 7 மணிக்கு கலைமாமணி சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தலைமையில் “திருக்குறளால் அதிக நன்மை தனிமனிதருக்கே - சமுதாயத்திற்கே” எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

பட்டிமன்றத்தில் தனிமனிதருக்கே எனும் கருத்தை வலியுறுத்தி தா.இராஜாராம், சே.மோகனசுந்தரம், மதுக்கூர் இராமலிங்கம் ஆகியோர் வாதிடுகிறார்கள்.

சமுதாயத்திற்கே எனும் கருத்தை வலியுறுத்தி புலவர் இரெ.சண்முகவடிவேல், பேராசிரியர் பர்வீன் சுல்தானா, ராஜா ஆகியோர் வாதிடுகிறார்கள்.

சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தீர்ப்பு வழங்கி உரையாற்றுகிறார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 31.12.2024 செவ்வாய்க்கிழமை

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வரவேற்புரையாற்றுகிறார்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் முன்னிலையேற்று உரையாற்றுகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் தோரண வாயிலுக்கு அடிக்கல் நாட்டி; திருவுருவச் சிலை வெள்ளிவிழாச் சிறப்பு மலரை வெளியிட்டு; திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ- மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

அதனைத் தொடர்ந்து, பியானோ இசைக் கலைஞர் செல்வன் லிடியன் நாதஸ்வரத்தின் திருக்குறள் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா நன்றி கூறுகிறார்.

**கருத்தரங்கம்!**

தொடர்ந்து காலை 11.30 மணிக்கு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் கருத்தரங்கம் தொடங்குகிறது.

பேராசிரியர் அ.கருணானந்தன் ‘சமகாலத்தில் வள்ளுவர்’ எனும் தலைப்பிலும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் ‘திருக்குறளும் சங்க இலக்கியமும்’ எனும் தலைப்பிலும், புலவர் செந்தலை ந.கவுதமன் ‘வள்ளுவம் போற்றும் சமய நல்லிணக்கம்’ எனும் தலைப்பிலும், வழக்கறிஞர் அருள்மொழி ‘திருக்குறள் போற்றும் மகளிர் மாண்பு’ எனும் தலைப்பிலும், கரு.பழனியப்பன் ‘வள்ளுவம் காட்டும் அறம்’ எனும் தலைப்பிலும், பேராசிரியர் விஜயசுந்தரி ‘திருக்குறளில் இசை நுணுக்கம்’ எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தி அய்யன் திருவள்ளுவரின் பெருமைகளை அகிலத்திற்கு எடுத்துரைப்பர்.

தொடர்ந்து மாலை 4.30 மணி முதல் 7.30 மணி வரை பல்வேறு கலைஞர்கள் பங்குபெறும் அரிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

1.1.2025 புதன்கிழமை நிறைவு நாள் நிகழ்ச்சிகள் காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திருக்குறள் ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்து நினைவுப் பரிசுகள் வழங்குகிறார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா, நன்றியுரை ஆற்றிட நாட்டுப்பண்ணுடன் அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நிறைவுபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1975-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் 31.ஆம் நாள் சென்னை கோட்டையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குமரிமுனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு; 25 ஆண்டுகளுக்குப் பின் 1.1.2000 அன்று அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு அடுத்த 25 ஆண்டுகளுக்குப் பின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவை ஊரும் உலகமும் போற்றக் கொண்டாடி தமிழ் நெஞ்சங்கள் அனைத்தையும் உவகையில் துள்ளச் செய்துள்ளார்.

---

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில்

# கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை மாவட்டங்களில் 29 மருத்துவக் கட்டிடங்கள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!



சென்னை, டிச.29-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 29 மருத்துவக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது – பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டாரம், ஜி.அரியூர் கிராமத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட 19 மருத்துவக் கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் 26.12.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

உடன் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அவர்கள், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் அவர்கள், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் அவர்கள், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார் அவர்கள், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட ஜி.அரியூர் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், ரிஷிவந்தியம் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், மணிமுத்தார் டேம் பகுதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டிடத்தினையும், புதுப்பேட்டை கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், மூங்கில் துறைப்பட்டு கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் கிராமத்தில் ரூ.50 இலட்சம்; மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், எலவனசூர்கோட்டை கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், அதையூர் கிராமத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், கிளாப்பாளையம் கிராமத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட கச்சிராப்பாளையம் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், சின்னசேலம் கிராமத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், மூக்கனூர் கிராமத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், காட்டுவனஞ்சூர் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், மாயம்பாடி, பரங்கிநத்தம், வாரம் ஆகிய கிராமங்களில் தலா ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், மதூர் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்தினையும், கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட ஈரியூர் கிராமத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், தியாகதுருகம் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் என மொத்தம் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் 19 புதிய மருத்துவ கட்டிடங்களை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் காணொளிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள்.

**பின்னர் இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசியதாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து, மருத்துவத் துறை சார்ந்த பல்வேறு திட்டங்கள் திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமாலை மாவட்டத்தில் தமிழ்நாட்டில் இருக்கும் மலை கிராமங்களில் வசிக்கின்ற பழங்குடியின மக்களுக்கு எளிதாக மலைக் கிராமங்களில் பயணிக்கின்ற வகையில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் 25 இருசக்கர அவசர ஊர்தியினையும் (ஆம்புலன்ஸ்), ஆய்வக வசதிகளுடன் கூடிய 20 வாகனங்களையும் மலைவாழ் மக்களுக்கு வழங்கி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் திருவண்ணாமலையில் 10 இடங்களில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான புதிய கட்டிடங்கள், ஆய்வகக் கட்டிடங்கள், தொழில் சுகாதார கட்டிடங்கள் என மொத்தம் 10 கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 19 புதிய மருத்துவக் கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் இன்று திறக்கப்பட்ட 29 கட்டிடங்களையும் சேர்த்து 1,400 புதியக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதிலும் பழையக் கட்டிடங்கள் மற்றும் வாடகைக் கட்டிடங்கள் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. 2,262 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டிங்களில் இயங்கி வருகிறது. 2,024 கட்டிடங்கள் பழைய நிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 10,999 சுகாதார நிலையக் கட்டிடங்கள் உள்ளன. 4,286 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கும் நிலையில் உள்ளது. கள்ளக்குறிச்சியில் 20 சுகாதார நிலையங்கள் வாடகைக் கட்டிடத்திலும், 11 கட்டிடங்கள் பழைய நிலையிலும் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, படிப்படியாக சுகாதாரத் துறையின் கட்டிடங்கள் புதியதாக கட்டப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் 200 படுக்கை வசதிகள் கொண்ட கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை தொடங்கி வைத்தார்கள். திருக்கோவிலூரில் ரூ.52 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனைக் கட்டிடமும், ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் உளுந்தூர்பேட்டை மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் பன்முக சிகிச்சைப் பிரிவு கட்டிடமும், ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஒரு புதியக் கட்டிடமும், சின்னசேலம் அரசு மருத்துவமனையில் ரூ.11.70 கோடி மதிப்பீட்டில் பன்முக சிகிச்சை பிரிவு கட்டிடமும், திருநாவலூர், குன்னத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு சுகாதார நிலையமும், சங்கராபுரம் அரசு மருத்துவமனை ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

ஆரம்பூண்டி, நொச்சிமேடு, வெள்ளிமலை ஆகிய இடங்களில் சுகாதார கட்;டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. பாக்கம்பாடி, மேலூர், கள்ளக்குறிச்சி, பெரியமாம்பட்டு, தியாகதுருகம், மணலூர்பேட்டை, லக்கிநாயக்கன்பட்டி, ஜி.அரியூர் ஆகிய பகுதிகளில் புதியக் கட்டிடங்கள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், நாளைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தமிழ்நாடு முழுவதிலும் உள்ள போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் பயிற்சி தொடங்கி வைக்கப்படவுள்ளது. உலகில் வேறு எந்த பொது போக்குவரத்துத் துறையிலும் இத்திட்டம் இல்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு புதியத் திட்டங்களை கடந்த மூன்றரை ஆண்டுகளில் செயல்படுத்தி உள்ளார்கள். 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்தப்படி ஒரு கோடி பயனாளிகளுக்கு இத்திட்டம் சென்றடைந்துள்ளது. ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மருத்து பெட்டகத்தினை திருச்சியில் வழங்கினார். ஒரு திட்டத்தை தொடங்கியது முதல் அதனைக் கண்காணித்து அதன் தொடர் வெற்றியிலும் பங்கு கொள்பவர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் ஆவார்கள்.

2024ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் சுகாதாரத் துறைக்கு ஐ.நா.சபை மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்திற்கான ஒரு விருதை அறிவித்துள்ளது. 3.20 இலட்சம் பயனாளிகள் நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ரூ.1 இலட்சத்தினை ரூ.2 இலட்சமாக தமிழ்நாடு முதலமைச்சர் உயர்த்தி கொடுத்துள்ளார்கள். 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருதயம் தொடர்பான மூன்று வகையான மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. 13,270 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். ஈரோடு, இராணிப்பேட்டை, கன்னியாகுமரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் புற்றுநோய் கண்டறியும் மற்றும் சிகிச்சை பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை நடைபெறவுள்ளது. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் ஆகியோருக்கு புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை தொடங்கி வைக்கப்படவுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் சிறப்பாக செயல்படும் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்படும் தேசிய தர உறுதி நிர்ணயத் திட்ட விருது 242 மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் பெற்றுள்ளனர். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 11 ஆரம்ப சுகாதார நிலையங்கள் விருதுகள் பெற்றுள்ளனர். மகப்பேறு துறையின் 82 விருதுகள் பெறப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் சுகாதாரத் துறையின் இதுபோன்ற திட்டங்களை உரியமுறையில் பயன்படுத்தி நோயற்ற நல்வாழ்வு வாழ்வதுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான மக்கள் நலத்திட்டங்களுக்கு பொதுமக்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி பேசினார்.

**பின்னர் இந்நிகழ்ச்சியில் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் பேசியதாவது:**

திருவள்ளுவர் அவர்களின் வாக்கிற்கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நோயினையும் அதற்கான காரணத்தினையும் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் அதனை குணப்படுத்தலாம். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். நாம் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரைப் பார்த்து சிகிச்சை பெற்ற நாள் மாறி தற்போது மருத்துவர்கள் மக்களைத் தேடி அவர்களின் இல்லத்திற்கே சென்று சிகிச்சை அளித்து வருகின்றார்கள். 217 பெண் சுகதார தன்னார்வர்களைக் கொண்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள மக்களில் பெரும்பான்மையான மக்களுக்கு பரிசோதனை மேற்கொண்டு மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஏற்படும் சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகளை தடுப்பதற்காகவும், விபத்து ஏற்படும் பட்சத்தில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவும் தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டுவந்த சிறப்புத் திட்டம் தான் நம்மைக் காக்கும் 48 திட்டமாகும்.

தமிழ்நாட்டில் எங்கு விபத்து ஏற்பட்டாலும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் உடனடியாக மருத்துவம் செய்யப்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை-1, வட்டார மருத்துவமனைக்கள்-4, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்-9, ஆரம்ப சுகாதார நிலையங்கள்-36 என கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தைப் போல கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலைக்கு இரு சக்கர வாகன ஆம்புலன்ஸ் வழங்க வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு ஆட்சிப்பொறுப்பேற்கும் போதெல்லாம் மறுமலர்ச்சி பெறும் சுகாதாரத்துறையின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டுவரும் சிறப்புத் திட்டங்களின் கீழ் பொதுமக்கள் பயனடைந்து வருவதற்கு தமிழ்நாடு மக்களின் சார்பில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களுக்கு பொதுமக்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.இரா.புவனேஷ்வரி பெருமாள், திருக்கோவிலூர் சார் ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், இஆப, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சு.ராஜா அவர்கள், திருக்கோவிலூர் ஒன்றியக்குழு தலைவர் திருமதி.அ.அஞ்சலாட்சி அரசகுமார், ஒன்றியக்குழு துணைத் தலைவர் திருமதி.ச.தனம் சக்திவேல் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுகாதாரத்துறை அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.